Judicial Form No.53
( See Rule 42 )
**DEPOSITION OF WITNESSES**
(Chapter XXIII Code of Criminal Procedure)
**IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.III. TIRUPATHUR**
**Case No. CC. No. 24/2022**
**DEPOSITION OF PROSECUTION SIDE EVIDENCE No. 3 Page.No.**

2025ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 15 ம் நாள் செவ்வாய்க்கிழமை அரசு தரப்பு சாட்சியாகிய அ.சா.3 வது நபரின் வாக்குமூலம் (1969ம் ஆண்டின் 54வது விதியின் 9வது பிரிவின் ஏற்பாட்டின்படி திருமதி. மீனா, உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிராமணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ஹரி விக்ரம் | ஜாதி | |
| தந்தை/கணவர் பெயர் | இளங்கோவன் | தொழில் | செல்போன் கடை |
| கிராமம் | நாட்றம்பள்ளி | மதம் | |
| மாவட்டம் | திருப்பத்தூர் | வயது | 30 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969 )on the 15th day of April 2025.

சாட்சி ஆஜர் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

**<u>முதல் விசாரணை :</u>   எதிரி ஆஜர்**

நான் நாட்றம்பள்ளியில் வசிக்கிறேன். நான் செல்போன் கடை நடத்தி வருகிறேன். அ.சா 1 இளங்கோ எனது தந்தை. சுமார் 4 ஆண்டுகளுக்கு முன்பு, எங்களது பேக்கரி கடையில் இருந்து சுமார் 1/2 கிமீ தொலைவில் டீக்கடையில் இருந்தேன். அப்போது, சுமார் இரவு 08.00 மணியிருக்கும். அப்போது அ.சா.2 எனது மாமா எனக்கு போன் செய்து உனது அப்பாவிற்கு தலையில் அடிப்பட்டிருக்கிறது என்று கூறினார். பின்னர், 2 நிமிடத்தில் சம்பவயிடத்திற்கு வந்து விட்டேன். எனது தந்தைக்கு முன் தலையில் வெட்டுக்காயம் காணப்பட்டது. ஒரு கல்லை காண்பித்து இந்த கல்லால் தான் என் தந்தையை ஆஜர் எதிரி விக்னேஷ் தாக்கியதாக கூறினார். அப்போது, என் தந்தையின் தலையில் நிறைய ரத்தம் வந்ததால் அவரை நாட்றம்பள்ளி அரசு மருத்துவமனைக்கு அழைத்து செல்லலாம் என்று கிளம்பினோம். வழியில் காவல் நிலையத்தில் தகவல் சொல்லலாம் என்று

போனபோது, ஆஜர் எதிரி அதற்குள் காவல் நிலையத்தில் வந்து சரணடைந்து விட்டார். போலீசார் முதலில் மருத்துவமனைக்கு சென்று சிகிச்சையில் சேரும் படி கூறி அனுப்பி விட்டார்கள். நாட்றம்பள்ளி அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சென்று, திருப்பத்தூர் அரசு மருத்துவமனைக்கு செல்லும்படி கூறிவிட்டார்கள். எனவே, நாங்கள் என் தந்தையை திருப்பத்தூர் அரசு மருத்துவமனைக்கு அழைத்து வந்தேன். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

எதிரி ஆஜர், எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜரில்லை. குறுக்கு விசாரணை செய்ய வாய்ப்பு வழங்கப்பட்டு, குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை. எனவே குறுக்கு விசாரணை முடித்து வைக்கப்பட்டது.

சாட்சியின் கையொப்பம்